**கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம் , பொபது., திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம், சேப்பாக்கம், சென்னை -5.**

முன்னிலை: **பொறி. சே . மணிகண்டன், எம் . இ.,**

கண்காணிப்புப் பொறியாளர்,பொபது.,

**<u>செயல்முறை ஆணை எண். அ1 / 1622 / 2024 / நாள். 24.08.2024.</u>**

**பொருள்:** பணியமைப்பு – பொபது., - த.நா.அ.ப.தொகுதி – காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு.N.ஜோதி வெங்கடாசலம் மின் மேஸ்திரியின் மகள் செல்வி.J.V.ஜெயலட்சுமி, இளநிலை உதவியாளர் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் – பணி வரன் முறை - ஆணை வழங்குதல் – குறித்து.

**பார்வை :** 1) முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொதுப்பணித்துறை., சென்னை-5 அவர்களின் எஸ் .3 (3) / 041386 / நாள். 03 .08 .2023.

2) இவ்வலுவலக செயல் முறை ஆணை எண். அ2 / 1662 / 2023/ நாள். 16 .08 .2023.

3) அரசாணை (நிலை) எண். 18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ 1) த் துறை நாள்.23.01.2020.

4) செயற் பொறியாளர், பொபது., கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம், சேப்பாக்கம் சென்னை -5 அவர்களின் கடித எண். அ2 / 0835 / 2023 நாள்.05.06.2024.

5) இவ்வலுவலக கடித எண். அ1 / 1264 / 2024 / நாள். 11.06 .2024.

6) அரசாணை (நிலை) எண். 33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, நாள்.08.03.2023.

7) தலைமை செயலகம், பொதுப்பணித்துறை, சென்னை-5 அரசு கடித எண் 2508 / பணி II (1) / 2024 நாள்.23.07.2024.

8) முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொதுப்பணித்துறை., சென்னை-5 அவர்களின் கடித எண்.எஸ் .2 (3) / 016482 / 2024 / நாள். 31.07 .2024.

******

பார்வை 3ல் காணும் அரசாணையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் குறித்து வரையறுக்கப்பட்ட ஒருங்கிணைந்த வழிகாட்டு நெறிமுறைகள் (Guidelines) வெளியிடப்பட்டுள்ளன.

பார்வை 6ல் காணும் அரசாணையில் 02.02.2016 முதல் 31.12.2019 வரையிலான காலத்தில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை வரன் முறை செய்வதற்கு கீழ்காணும் வழிமுறை (Guidelines) பின்பற்ற வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது.

02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்த வித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்பட வேண்டும்.

கருணை அடிப்படையில் பணி அமர்த்தப்பட்ட அரசு பணியினை வரன்முறை செய்வதற்கான அதிகாரம் சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்களுக்கு (one level higher than the appointing authority) வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

செல்வி.J.V.ஜெயலட்சுமி, இளநிலை உதவியாளரின் பணி வரன்முறை தொடர்பான கருத்துரு, பார்வை 5ல் காணும் இவ்வலுவலக கடிதம் வாயிலாக தனியர் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 18.08.2023 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்து அரசிடமிருந்து ஆணை பெற்று வழங்குமாறு முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களைக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

அக்கருத்துரு பார்வை 7ல் காணும் அரசு கடிதங்களில் தெரிவித்துள்ளப்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு பார்வை 8ல் காணும் முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களின் கடிதத்தின் வாயிலாக இவ்வலுவலகத்திற்கு திருப்பப்பட்டது.

3..

இத்துறையை சார்ந்த சென்னை, சேப்பாக்கம், மின் கோட்டம் உபகோட்டம், பொபது., அலுவலகத்தில் மின் மேஸ்திரியாக பணிபுரிந்து வந்த திரு.N.ஜோதி வெங்கடாசலம் கடந்த 22.01.2021 அன்று காலமானதை அடுத்து, அவரது வாரிசுதாரர் / மகளான செல்வி.J.V.ஜெயலட்சுமி, என்பவர் 10.08.2022 நாளிட்ட கடிதத்தில் கருணை அடிப்படையில் தனக்கு வேலை வழங்குமாறு கேட்டுக் கொண்டதற்கினங்க, பார்வை 3ல் காணும் அரசாணையில் வழங்கப்பட்டுள்ள நெறிமுறைகளின் படி, அவர் முழு கல்வி மற்றும் வயது தகுதிகள் பெற்றுள்ளதால் பார்வை 1ல் காணும் முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொதுப்பணித்துறை., சென்னை-5 செயல் முறை ஆணையின் வாயிலாக தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 ( தமிழ்நாடு சட்டம்-2016) இல் உள்ள பிரிவில் 17(1) ன் படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டு சென்னை, சேப்பாக்கத்தின் கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம், கீழ் உள்ள உதவிசெயற்பொறியாளர், பொபது., கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்டம் சென்னை-5 அலுவலகத்தில் 18.08.2023 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 4ல் காணும் செயற் பொறியாளர் அவர்களின் கடிதத்துடன் பெறப்பட்ட கருத்துருவினை நன்கு ஆய்வு செய்ததின் அடிப்படையிலும், செல்வி.J.V.ஜெயலட்சுமி, இளநிலை உதவியாளர் அவர்கள் பார்வை 3ல் காணும் அரசாணையின்படி கருணை அடிப்படையிலான நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளதாலும் பார்வை 6ல் காணும் அரசாணையின் வழிகாட்டுதலின்படி அவரது பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பொதுப்பணித்துறையில் **கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட நாளான 18.08.2023 முற்பகல் முதல் பணி நியமனத்திற்குரிய உடந்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.**

இவருக்கு முன் நாளிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், இவருக்கு ஊதிய உயர்வு / ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் அவற்றைப் பெற விதிகளின் படி தகுதியுடையவராகிறார்.

மேலும், செல்வி.J.V.ஜெயலட்சுமி, இளநிலை உதவியாளர் அவர்கள் தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 (தமிழ்நாடு சட்டம் - 2016)இல் உள்ள பிரிவில் 28(1)ன் படி **தமிழ்நாடு அரசு பணிகளின் கீழ் இவர் இளநிலை உதவியாளராக பணி வரன்முறை செய்யப்பட்ட நாளான 18.08.2023 முற்பகல் முதல் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார்.**

இவர் **தகுதிகாண் பருவத்தினை 18.08.2023 முற்பகல் முதல் தொடங்கி இரண்டாண்டு தகுதிகாண் பருவகாலத்தினை மூன்றாண்டு தொடர் பணியில் முடிக்க வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்படுகிறார்.**

இவர் தகுதிகாண் பருவ காலத்தில் பவானிசாகர் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும் அரசு அலுவலர்கான அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும்.

தனியர், பணியில் சேர்ந்த நாளான 18.08.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

**கண்காணிப்புப் பொறியாளர், பொபது,**
**திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம்,**
**சேப்பாக்கம்,சென்னை-5.**
24/8/24

**பெறுநர்**

1) செல்வி.J.V.ஜெயலட்சுமி, இளநிலை உதவியாளர்,
உதவி செயற் பொறியாளர், பொபது., கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்டம், சென்னை-5.
(வழி) செயற் பொறியாளர், பொபது., கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம், சென்னை.

**நகல்:** முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொபது., சென்னை-5 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

**நகல்:** செயற் பொறியாளர், பொபது., கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம், சென்னை அவர்களுக்கு அனுப்பப்படுகிறது. தனியரின் பணிவரன்முறை தொடர்பான சான்றிதழ்கள் சான்றாவணங்கள் (அசல்) ஆகியவற்றை பெற்றுக் கொண்டமைக்கான ஏற்பளிப்பினை வழங்குமாறும், இவ்வாணையினை தனியரின் பணிப்பதிவேட்டில் பதியுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**நகல்:** பட்டியல் -2.

**நகல்:** இருப்பு கோப்பு.